[2005 ஏப்ரல் 1

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு நேரம் என்ன கேட்டீர்கள்? திரு. டி.பி. பொன்னம்பலம்.

திரு. டி.பி. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது தொகுதியான சமயநல்லூர் தொகுதியில், மேற்கு ஒன்றியத்தில் சத்திரப்பட்டியில் அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்றும், அதன் அருகில் காஞ்சிரம்பேட்டையில் நல்லமணி மேல்நிலைப் பள்ளி ஒன்றும் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு பள்ளிகளிலும் கிட்டத்தட்ட இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். ஆகவே, அதற்கு ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்டித்தர வேண்டுமென்றும், அதேபோல், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தில், ஒத்தக்கடையில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது, அங்கும் இரண்டாயிரம் மாணவியர்கள் பயின்று வருகின்றார்கள். அதற்கும் ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவியர் இல்லம் கட்டித் தரப்படுமா என்றும் அன்புடன் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதநேயமிக்க மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 276, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

276—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நூலகம்

***40550—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, சேமபாளையம், ஏ. வாசுதேவனூர், பாலப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2005 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதி, பாலப்பட்டு ஊராட்சியில், 10–11–2003 முதல் ஊர்ப்புற நூலகம் இயங்கி வருகின்றது. மேலும், சேமபாளையம் மற்றும் ஏ. வாசுதேவனூர் ஆகிய ஊராட்சிகளிலே ஒரு நூலகம் அமைப்பதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்யும்பட்சத்தில் அங்கு நூலகம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 277, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.*

277—

பின்னலாடைத் தொழில்

***8242—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதித் தொழில் வாய்ப்பை மேம்படுத்த அரசிடம் சிறப்புத் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதித் தொழில் வாய்ப்பை மேம்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு சிறப்பான திட்டத்தைத் தீட்டியுள்ளது. (ஆ) திருப்பூர் பின்னலாடைத் தொழிலுக்கு ஏற்றுமதி வாய்ப்பினை மேம்படுத்துவது குறித்து, திருப்பூரில் ஆயத்த ஆடைப் பூங்கா சுமார் 220 ஏக்கர் பரப்பளவில் மத்திய, மாநில அரசு மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் சேர்ந்து 17 கோடி ரூபாய் செலவிலே அமைக்கப்பட்டுள்ளது.*

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதித் தொழிலை மேம்படுத்த திருப்பூரில் ஆயத்த ஆடைப் பூங்கா அமைக்க 220 ஏக்கர்*